திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டுக் கொண்டே போனால் ஒரு மணி நேரம் போக லாம். நீங்கள் சொல்லப் போவதை கவனத்தில் வைத்திருக்கி றேன். கட்சித் தலைவராக இருக்கிற தாங்கள் என்னோடு ஒத்துழைக்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தாங்கள் கொடுத்த பதில் அவர்கள் கொடுத்திருக்கிற பிரிவிலேஜ் மோஷன் சம்பந்தமானது. நான் கொடுத்தது சம்பந்தமாக நான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி நீங்கள் என் அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. பொ. விஜயராகவன் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். நாளைக்கு வருகிறது.

6. அரசினர் தீர்மானம்.

விதி 41 (3) ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடைமுறை விதி 41(3)—ன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களைக் கவன ஈர்ப்புக்குக் கொண்டுவரக் கூடாது என்ற விதியைத் தளர்த்த வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்ற பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS